மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இடைக்காலத்தில் சினியர் ப்ரொபசர் கூடுதல் பொறுப்பாக முதல்வர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

தமிழ்நாடு தேசிய மாணக்கர் படை

*** 63 வினா—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கல்லூரிகள் அனைத்திலும் தமிழகத் தேசிய மாணக்கர் படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அப்படைக்கும், முன்பிருந்த தேசிய மாணக்கர் படைக்கும் பயிற்சி முறையில் உள்ள வேறுபாடுகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) கல்வி நிறுவனத் தலைவர்களிடமிருந்து கல்வி இயக்குநரின் சிபாரிசுடன் கோரிக்கை பெறப்பட்ட கல்லூரிகளில் தேசிய மாணவர் படை அமைக்கப் படுகின்றன.

(இ) தேசிய மாணவர்கபடை பழைய திட்டத்திற்கும், புதிய திட்டத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் பின்வருமாறு :—

1. பழைய திட்டத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி மூன்றாண்டுகட்குக் கட்டாயமாக இருந்தது. ஆனால் தற்போதுள்ள திட்டத்தில் ஈராண்டுகட்கு அவரவர் விருப்பப்படி—கட்டாயம் ஏதுமின்றி—அப்பயிற்சி உள்ளது, முதல் இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்புப்பயிலும் மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2. புதிய திட்டத்தின் கீழ் புகுமுக வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை, முன்பெல்லாம் அவர்கள் பழைய திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

3. இறுதியாண்டு பட்டப்படிப்பு மாணவர்கள் தேசிய மாணவர் படையில் தொடர்ந்து இருக்க விருப்பப்பட்டால் அவர்கள் அவ்வாறே இருக்க அனுமதிக்கபடுகின்றனர், மேலும் அவர்களுக்கெனத் தனிப் பாடத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : தமிழக தேசிய மாணக்கர் படை அரசினர் கல்லூரிகளிலும், தனியார் துறை கல்லூரிகளிலும் ஒரே நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றனவா ? வேறுபாடு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசினர் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் எல்லாவற்றிலும் என்.சி.சி-க்கு ஒரே முறைதான் கையாளப்பட்டு வருகிறது.

திரு. ஆர். கருப்பையா : இந்த தேசிய மாணவர் படையில் கல்லூரி மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனரா? இல்லை யென்றால் இனியாவது சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

1970 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கல்லூரி மாணவியரும் ஒருசில கல்லூரிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : தமிழக தேசிய மாணவர் படையில் கட்டளைச் சொற்கள் எந்த மொழியில் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விளக்கங்கள் முன்பே அளிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற இரண்டு ஆண்டுகளாகவும், இப்போதும் கட்டளைச் சொற்கள் ஆங்கிலத்தில் தான் இருந்து வருகின்றன.

திரு. கி. பொன்னுமலை : தேசிய மாணாக்கர் படை பயிற்சி மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒருநாள்தான் தரப்படுகிறது. வாரத்தில் ஆறு நாட்கள் கட்டாயமாகப் பயிற்சி தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பயிற்சி எவ்வளவு நாட்களுக்குத் தரவேண்டுமென்பதற்கான முறையை ராணுவத்தினரே வகுத்துத் தருகிறார்கள். ஓராண்டுக்கு இவ்வளவு நாட்கள் பயிற்சி தரப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பயிற்சி தரப்படுகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த தேசிய மாணாக்கர் படை கட்டுப்பாட்டையும், உடல் உறுதியையும் வளர்ப்பதாக இருப்பதால் விரும்புகிற கல்லூரிகள் என்று இல்லாமல் எல்லாக் கல்லூரிகளிலும் இதைக் கொண்டுவர உத்தேசம் உண்டா ? முன்பு பயிற்சிக் காலம் மூன்றாண்டுகளாக இருந்தது ஏன் இப்போது இரண்டு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சீனப் போருக்குப் பிறகு நாட்டில் எழுச்சி ஏற்பட்டு எல்லோருக்கும் கட்டாய ராணுவப் பயிற்சி அளிக்க வேண்டுமென்ற திட்டத்தில் கல்லூரிகளில் கட்டாயமாக பயிற்சி கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டது. இப்போது என்.சி.சி., என்.சி.ஓ. போன்ற பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு சில சமூகப் பணிகள் செய்யக்கூடியதாகவும், சில கேம்ஸ், ஸ்போர்ட்ஸ் சம்பந்தப்பட்டதாகவும் ஏற்படுத்தப்பட்டு என்.சி.சி. படையில் விரும்புகிறவர்கள் சேரலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்திய அரசுதான் இந்த முடிவை எடுத்தது. பயிற்சிக் காலம் மூன்றாண்டுகாலம் என்று இருந்ததை இரண்டு ஆண்டுக்காலம் என்று மாற்றியதும் இந்திய அரசின் முடிவுப்படிதான். பி.யு.சி.-ல் இந்தப் பயிற்சியை ஆரம்பித்தால் அவர்கள் மேற்கொண்டு தொடருவார்களா என்ற ஐயப்பாடு இருப்பதன் காரணமாக, ஓராண்டுப் பயிற்சி அவர்களுக்கு எந்த விதத்திலும் பயன்தராது என்ற நிலையில், பட்டப் படிப்பு மூன்று ஆண்டு படிக்கும்போது முதல் இரண்டு ஆண்டுகள் என்.சி.சி. பயிற்சி கொடுக்க வேண்டுமென்று இந்திய அரசு முடிவு செய்ததற்கு ஏற்ப நடைபெற்று வருகிறது.